2013 பிப்ரவரி 6]

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு போக்குவரத்துக் கழகத்தின் இயக்க பேருந்துகளுடைய எண்ணிக்கைகளுக்கேற்ப புதிய பணிமனைகள் தொடங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் புதிதாக 7 பணிமனைகள், அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்திற்கு புதிதாக 7 பணிமனைகள், மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்குப் புதிதாக 25 புதிய பணிமனைகளைத் தொடங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நிதியைக் கொடுத்து உத்தரவிட்டு, நிலங்கள் எடுக்கப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, இந்தப் பணிகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பணிமனை பணிகளுக்கு, பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கைகளை ஒதுக்குவது, பேரவைத் தலைவருடைய முழு அதிகாரம். என்னுடைய உரிமை. (குறுக்கீடு) இல்லை, அதில் நீங்கள் தலையிட முடியாது. அதைப்பற்றி விவரம் வேண்டுமென்றால், என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள், சொல்கிறேன். ** திரு. பெரியகருப்பன், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

காலிப் பணியிடங்கள்

***1116—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மற்றும் இராசா மிராகதார் மருத்துவமனையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள 175 மருத்துவப் பணியிடங்களில் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பெரியகருப்பன், உட்காருங்கள். இதை எனது அறையில் வந்து கேளுங்கள், நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். இதையெல்லாம் இந்த அவையிலே பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த அவையிலே பேச முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அமைச்சராக இருந்தவர்; திட்டமிட்டு, இந்த அவையினுடைய நடவடிக்கைகளைக் குலைக்க வேண்டுமென்று, அவர் கருத்துகளை சொல்லிக்கொண்டிருக்கிறார். தயவு செய்து அதன்மீது பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேசியதில், தொடர்புடைய கேள்வியைத் தவிர, வேறெதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள 175 மருத்துவப் பணியிடங்களில் 34 பணியிடங்களும், 44 இதர பணியாளர் பணியிடங்களில் 16 பணியிடங்களும் காலியாக உள்ளன. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் உள்ள 36 மருத்துவர் பணியிடங்களில் 3 பணியிடங்களும், 156 செவிலியர் பணியிடங்களில் 6 பணியிடங்களும் மற்றும் 85 இதர பணியாளர் பணியிடங்களில் 33 பணியிடங்களும் காலியாக உள்ளன.*

மேலும், அரசு இராசா மிராசுதார் மகப்பேறு மருத்துவமனையில் உள்ள 54 மருத்துவர் பணியிடங்களில் 2 பணியிடங்களும், 123 செவிலியர் பணியிடங்களில் 8 பணியிடங்களும் மற்றும் 240 இதர பணியாளர் பணியிடங்களில் 64 பணியிடங்களும் காலியாக உள்ளன. மேற்படி காலிப் பணியிடங்களை மருத்துவப் பணிகள் தேர்வாணையத்தின்மூலம் நிரப்பத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலைப் பார்க்கின்றபோது, குறிப்பாக, சுகாதாரப் பணியாளர்களுடைய எண்ணிக்கைதான் சற்றுக் குறைவாக இருக்கிறது என்று இதன்மூலம் புலப்படுகின்றது. எனவே தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே இந்த மூன்று மாவட்டங்களுக்கும் முக்கியமான reference centre–ஆக இருக்கக்கூடிய காரணத்தினாலே, வெகு விரைவில் அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவி ஏற்கும்போது தமிழக மருத்துவத் துறையில் கிட்டத்தட்ட 15,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தை ஏற்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை உதவி மருத்துவர் 2,300 பேரும், மற்றப் பணியாளர் 4,500 பேரும் தேர்வு செய்து பணியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது 2,151 மருத்துவப் பணியிடங்கள் காலியாகவுள்ளன. அனைத்துப் பணியிடங்களையும் உடனே நிரப்பும்படி மாண்புமிகு அம்மா அவர்கள்

ஆணையிட்டுள்ளார்கள். தற்போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராசா மிராசுதார் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் மருத்துவ செவிலியர் மற்றும் இதர பணியாளர்களுக்கான காலிப் பணியிடங்கள் குறைவாகவே உள்ளன. எனினும், இக்காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். வருங்காலத்தில் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாநிலத்தில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் காலிப் பணியிடங்களே இல்லை என்ற ஒரு நிலை ஏற்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தத்தைத் தெரிவிக்கிறார்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குக் கொடுத்த பதிலில் ஒரு திருத்தத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

சேலம் மாநகராட்சி திடக் கழிவு மேலாண்மையில் 2011–2012–இல் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டு, 9 Metric Ton எடை எடுக்கக்கூடிய 2 வாகனங்கள், Compactors Bin–100 எண்ணிக்கை, Push carts 50 ஆகவும், 2012–2013 ஆம் நிதியாண்டில் 5.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இரண்டு நிதியாண்டுகளிலும் சேலம் மாநகராட்சிக்கு மட்டும் 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு JCB–2, Compactor–6, Compactor Bins–200, Dumper Placer–6, Dumper Placer Bins–115, Tipper Lorries–10 ஆக இந்த திடக் கழிவு மேலாண்மை திட்ட பயன்பாட்டிற்காக வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]